(ஆறாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 18 ]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2008, ஓகத்து 22, வெள்ளிக்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0075/ '08

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கிழக்கு முழுவதும் அவ்வாறே வடக்கிலுள்ள முகாம்களில் பெரும்பாலானவையும் 1994 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்தன என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 1994 ஓகஸ்ட் 25 ஆம் திகதியன்றுள்ளவாறாக அரசாங்கப் படைகளின் கட்டுப்பாட்டில் இருந்த எல்லா இராணுவ முகாம்களையும்,

(ii) 2001 டிசம்பர் 01 ஆம் திகதியன்றுள்ளவாறான அரசாங்கத்தின் கட்டுப் பாட்டில் இருந்த முகாம்களையும்,

(iii) 2005 நவம்பர் 17 ஆம் திகதியன்றுள்ளவாறாக அரசாங்கத்தின் கட்டுப் பாட்டில் இருந்த முகாம்களையும்,

(iv) இன்றுள்ளவாறாக அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் முகாம்களை யும்,

(v) ஏதேனும் முகாம் கைப்பற்றப்பட்டிருப்பின் அது எப்போது இடம்பெற்றது என்பதை உறுதிப்படுத்தும் சான்றுகளுடனும்

அவர் அச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0076/ '08

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2007 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 10 ஆம் திகதிய 'திவயின' பத்திரிகையின் தலைப்புச் செய்தி "ஒரு சிங்கள கொட்டியா விசாரணையில்" என்பதாகும் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்த ஆளின் தற்போதைய நிலைமை என்ன என்பதையும்,

(ii) அவருக்கெதிராக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளனவா என்பதையும்,

(iii) குற்றம் சாட்டப்படாது வேறு எத்தனை "சிங்கள கொட்டியாக்கள்" தடுப்புக் காவலில் உள்ளனர் என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0077/ '08

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 1994 ஏப்ரல் 25ல் இருந்து இற்றைவரை,

(i) இயங்கி வரும் மொத்த ஆடைக் கைத்தொழில் தொழிற்சாலைகளின் எண்ணிக்கையினை அவற்றின் மொத்தத் தொழில் வாய்ப்புக்களின் எண்ணிக்கையுடனும்,

(ii) இயங்கி வரும் மட்பாண்டக் கைத்தொழில் தொழிற்சாலைகளின் எண்ணிக்கையினை அவற்றின் மொத்தத் தொழில் வாய்ப்புகளின் எண்ணிக்கையுடனும்,

(iii) தேயிலை, இறப்பர் மற்றும் தென்னை என்பவற்றிற்கான பெருந்தோட்டக் கைத்தொழில் தொழிற்சாலைகளின் எண்ணிக்கையினை வெவ்வேறாகவும்,

(iv) இக் கைத்தொழில் துறைகளிலுள்ள பெருந்தோட்டங்களின் எண்ணிக்கையினையும் பணியாள் தொகுதி உறுப்பினர்களின் எண்ணிக்கையினையும்,

(v) பாதணிக் கைத்தொழில் தொழிற்சாலைகளின் எண்ணிக்கையினை பணியாள் உறுப்பினர்களின் எண்ணிக்கையுடனும்

(vi) மீன்பிடிக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் எண்ணிக்கையினையும்,

(vii) விவசாயக் கைத்தொழில் ஈடுபட்டுள்ளவர்களின் எண்ணிக்கையினையும்,

(viii) கால்நடைக் கைத்தொழில் துறையில் ஈடுபட்டுள்ளவர்களின் எண்ணிக்கையினையும்

அவர் இச்சபைக்கு அறியத் தருவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0330/ '08

4.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— சுற்றாடல், இயற்கைவளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) பொலன்னறுவை மாவட்டத்தில் மின்னேரியா தேர்தல் தொகுதிக்குரிய மஹசென் கிராமத்துக்கு அருகில் உள்ள கல்லிந்த கிராமத்துக்கு சமீபமாகவுள்ள பொத்தான என்ற காணி மின்னேரியா வனவியல் பூங்காவுக்குச் சுவீகரிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இக்காணி அபிவிருத்தி செய்யப்படுவதற்காக யாருக்கேனும் ஒப்படைக்கப்பட்டுள்ளதா,

(ii) ஆமெனில், யாருக்கு, என்ன அடிப்படையில்,

(iii) மின்னேரியா சரணாலயத்தில் சுற்றுலா ஹோட்டல் ஒன்றை அல்லது விடுமுறை விடுதியொன்றை அமைக்க எவருக்கேனும் அனுமதி வழங்கப் பட்டுள்ளதா,

(iv) ஆமெனில், யாருக்கு, என்ன அடிப்படையில்

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0340/ '08

5.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— பெற்றோலியம், பெற்றோலியவள அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் இயந்திர தொழில் நிபுணராக கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள மாகொல தெற்கு, சாந்தி தெரு, 253/28 ஆம் இலக்க முகவரியில் வதியும் திரு. எச். பி. காமிணிதாஸ உட்பட 46 பேருக்கு 1994 முதல் இற்றைவரை வழங்க வேண்டிய சம்பள அதிகரிப்புக் கொடுப்பனவை செலுத்தவில்லை என்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி கொடுப்பனவை இவர்களுக்கு வழங்கத் தேவையான நடவடிக்கை மேற்கொள்வாரா?

(இ) இன்றேல், ஏன்?

0343 / '08

6.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டின் அபிவிருத்திப் பணிகள் சம்பந்தமாக மக்களை அறிவுறுத்துவதற்காக 2007.08.07 ஆம் திகதியன்று நாவலப்பிட்டியிலும் 2007.08.08 ஆம் திகதியன்று குருணாகலையிலும் நடத்தப்பட்ட கூட்டங்களுக்கான மேடை களை நிர்மாணித்த நிறுவனம் யாதென்பதையும்,

(ii) மேற்படி மேடைகளுக்காக சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு செலுத்தப்பட்ட மொத்தத்தொகை எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி பணத்தை செலுத்திய நிறுவனம் யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0467 / '08

7.

கௌரவ விஜித ரணவீர,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2007.12.31 ஆம் திகதியன்று உள்ளவாறு அம்பாந்தோட்டை மாவட்டத்தில் நெட்டொல்பிட்டிய கமநல சேவை நிலைய அதிகார பிரதேசத்தில் உள்ள வயல்களின் அளவு எத்தனை ஏக்கர்,

(ii) அவற்றிற்கிடையில் பெரிய நீர்ப்பாசனம், சிறிய நீர்ப்பாசனம், மானாவரி என்ற வகையில் பாசனம் பெறும் நிலத்தின் அளவு வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) 2007.12.31 ஆம் திகதியன்று உள்ளவாறு சம்பந்தப்பட்ட அதிகார பிரதேசத்தில் கமத்தொழில் செய்கின்ற குத்தகை விவசாயிகளின் எண்ணிக் கை, பயிர் செய்யப்படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவு யாது,

(ii) காணி உரிமையுடைய விவசாயிகளின் எண்ணிக்கையும் பயிர் செய்யப் படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவும் எவ்வளவு,

(iii) அது தவிர வேறு விவசாயிகள் இருப்பின் அவ்விவசாயிகளின் எண்ணிக் கையும் பயிர் செய்யப்படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவும் எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) 2000 ஆம் ஆண்டின் கமநல அபிவிருத்திச் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டதன் பின்னர் 2007.12.31 வரையிலான காலப்பகுதியில் குத்தகை விவசாயி இறந்து போனதன் காரணமாக காணி உரிமை யாளருக்கும் பின்னுரிமையாளருக்கும் இடையில் தோன்றியுள்ள பிணக்கு களின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) கமநல சேவை உதவி ஆணையாளருக்கு சம்பந்தப்பட்ட அதிகார பிரதேசத்திலிருந்து அறிவிக்கப்பட்டுள்ள குத்தகை விவசாயிகளின் பிணக்கு களின் எண்ணிக்கை எவ்வளவு,

(iii) குத்தகை விவசாய உரிமை பெற்ற பின்னுரிமையாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0468 / '08

8.

கௌரவ விஜித ரணவீர,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2007.12.31 ஆம் திகதியன்று உள்ளவாறு அம்பாந்தோட்டை மாவட்டத்தில் பெலியத்த கமநல சேவை நிலைய அதிகார பிரதேசத்தில் உள்ள வயல்களின் அளவு எத்தனை ஏக்கர்,

(ii) அவற்றிற்கிடையில் பெரிய நீர்ப்பாசனம், சிறிய நீர்ப்பாசனம், மானாவரி என்ற வகையில் பாசனம் பெறும் நிலத்தின் அளவு வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) 2007.12.31 ஆம் திகதியன்று உள்ளவாறு சம்பந்தப்பட்ட அதிகார பிரதேசத்தில் கமத்தொழில் செய்கின்ற குத்தகை விவசாயிகளின் எண் ணிக்கை, பயிர் செய்யப்படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவு யாது,

(ii) காணி உரிமையுடைய விவசாயிகளின் எண்ணிக்கையும் பயிர் செய்யப் படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவும் எவ்வளவு,

(iii) அது தவிர வேறு விவசாயிகள் இருப்பின் அவ்விவசாயிகளின் எண்ணிக் கையும் பயிர் செய்யப்படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவும் எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) 2000 ஆம் ஆண்டின் கமநல அபிவிருத்திச் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டதன் பின்னர் 2007.12.31 வரையிலான காலப்பகுதியில் குத்தகை விவசாயி இறந்து போனதன் காரணமாக காணி உரிமை யாளருக்கும் பின்னுரிமையாளருக்கும் இடையில் தோன்றியுள்ள பிணக்கு களின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) கமநல சேவை உதவி ஆணையாளருக்கு சம்பந்தப்பட்ட அதிகார பிரதேசத்திலிருந்து அறிவிக்கப்பட்டுள்ள குத்தகை விவசாயிகளின் பிணக்கு களின் எண்ணிக்கை எவ்வளவு,

(iii) குத்தகை விவசாய உரிமை பெற்ற பின்னுரிமையாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0469/ '08

9.

கௌரவ விஜித ரணவீர,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2007.12.31 ஆம் திகதியன்று உள்ளவாறு அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மோதரவான கமநல சேவை நிலைய அதிகார பிரதேசத்தில் உள்ள வயல்களின் அளவு எத்தனை ஏக்கர்,

(ii) அவற்றிற்கிடையில் பெரிய நீர்ப்பாசனம், சிறிய நீர்ப்பாசனம், மானாவரி என்ற வகையில் பாசனம் பெறும் நிலத்தின் அளவு வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) 2007.12.31 ஆம் திகதியன்று உள்ளவாறு சம்பந்தப்பட்ட அதிகார பிரதேசத்தில் கமத்தொழில் செய்கின்ற குத்தகை விவசாயிகளின் எண்ணிக்கை, பயிர் செய்யப்படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவு யாது,

(ii) காணி உரிமையுடைய விவசாயிகளின் எண்ணிக்கையும் பயிர் செய்யப் படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவும் எவ்வளவு,

(iii) அது தவிர வேறு விவசாயிகள் இருப்பின் அவ்விவசாயிகளின் எண்ணிக் கையும் பயிர் செய்யப்படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவும் எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) 2000 ஆம் ஆண்டின் கமநல அபிவிருத்திச் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டதன் பின்னர் 2007.12.31 வரையிலான காலப்பகுதியில் குத்தகை விவசாயி இறந்து போனதன் காரணமாக காணி உரிமை யாளருக்கும் பின்னுரிமையாளருக்கும் இடையில் தோன்றியுள்ள பிணக்கு களின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) கமநல சேவை உதவி ஆணையாளருக்கு சம்பந்தப்பட்ட அதிகார பிரதேசத்திலிருந்து அறிவிக்கப்பட்டுள்ள குத்தகை விவசாயிகளின் பிணக்கு களின் எண்ணிக்கை எவ்வளவு,

(iii) குத்தகை விவசாய உரிமை பெற்ற பின்னுரிமையாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0514 / '08

10.

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடமேல் மாகாணத்தில் இலங்கை வங்கி கிளைகளில் நிலவிய ஏழு கணனி இயக்குநர் பதவி வெற்றிடங்களுக்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பின்னர் 2005.08.01 ஆம் திகதி முதல் மேற்படி நியமனங்கள் வழங்கப் பட்டுள்ளன என்பதையும்,

(ii) அவ்வாறு நியமனம் பெற்ற அனைவரும் தேசிய பயிலுனர் சபையில் கணனி மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான சான்றிதழ்களைப் பெற்று ள்ளவர்கள் என்பதையும்,

(iii) இவ்வாறு நியமனம் பெற்ற விண்ணப்பதாரிகள் ரூ. 300 நாளாந்த கொடுப்பனவின் மீது சேவையிலமர்த்தப்பட்டுள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) சுமார் இரண்டு வருடங்கள் தொடர்ச்சியாக நாளாந்த அடிப்படையில் சேவையாற்றியதன் பின்னர் அச்சேவையை இடைநிறுத்துவதாக 2007.07.05 ஆம் திகதி இவர்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது என்பதை யும்,

(ii) ஆயினும், இற்றைவரை சேவை இடைநிறுத்தப்படாததோடு, அவர்கள் இன்னும் நாளாந்த அடிப்படையில் சேவையாற்றுகின்றனர் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இலங்கை வங்கியில் தொடர்ச்சியாக சுமார் மூன்று ஆண்டுகள் நாளாந்த அடிப்படையில் சேவையாற்றியுள்ள இவர்களின் சேவையை நிரந்தரமாக்க அவர் உரிய நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0515 / '08

11.

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கம் 2007 ஆம் ஆண்டு சிறுபோகத்தில் கொள்வனவு செய்த நெல் ஒரு கிலோவின் விலை, கொள்வனவு செய்த நிறுவனங்கள் மற்றும் களஞ்சியப்படுத்தப்பட்ட நெல்லின் அளவு வெவ்வேறாக எவ்வளவு,

(ii) மேற்படி போகத்திலேயே நெல் சந்தைப்படுத்தும் சபையினால் மகாவலி வலயங்களிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் அளவு எவ்வளவு,

(iii) மேற்படி போகத்திலேயே நெல் சந்தைப்படுத்தல் சபை களஞ்சியப்படுத்திய நெல்லின் அளவு, விற்பனை விலை, மற்றும் கொள்வனவு செய்த நிறுவனங்கள் வெவ்வேறாக யாவை,

(iv) மக்களின் பாவனைக்காகவும் விலங்குணவுக்காகவும் வழங்கப்பட்ட நெல்லின் அளவு வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு முன்வைப்பாரா?

(ஆ) 2007 ஆம் ஆண்டு நெற்செய்கையினால் பெறப்பட்ட அறுவடை சிறுபோகம் மற்றும் பெரும்போகம் என்றவகையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) 2007 ஆம் ஆண்டு வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நெல்லின் அளவினை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0516 / '08

12.

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,— சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொலன்னறுவை மண்ணம்பிட்டி பிரதேசத்தில் மகாவலி கங்கையிலிருந்து பாரிய அளவில் மணல் அகழ்வு இடம்பெறுகின்றதென்பதையும்,

(ii) இதன் மூலம் சுற்றாடலுக்கு பெரும் பாதிப்பு ஏற்படுகின்றதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மண்ணம்பிட்டி பிரதேசத்தில் மகாவலி கங்கையிலிருந்து மணல் அகழ்வத ற்கான உரிமம் வழங்கப்பட்டுள்ளதா,

(ii) ஆமெனில், மேற்படி உரிமங்களைப் பெற்றுள்ளவர்களின் எண்ணிக்கை மற்றும் பெயர்கள் யாவை,

(iii) மேற்படி உரிமங்கள் புவிச்சரிதவியல் ஆய்வுகள், சுரங்கங்கள் பணியகத்தின் உரிய ஆய்வின் பின்னர் வழங்கப்பட்டுள்ளனவா

என்பதை அவர் இச்சபைக்குக் கூறுவாரா?

(இ) மேற்படி பிரதேசத்தில் அங்கீகாரமற்ற மணல் அகழ்வினை தடுத்து நிறுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0543 / '08

13.

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— தபால், தொலைத் தொடர்புகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுனாமி அனர்த்தம் காரணமாக ஹிக்கடுவ பிரதேச செயலகப் பிரவுக்குள் வீடுகளை மற்றும் சொத்துககளை இழந்து பாதிக்கப்பட்ட சுமார் ஆயிரம் குடும்பங்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டிருப்பது குலீகொட கலகொட மற்றும் ரத்கம மொன்ரோவியா ஆகிய இரு கிராமங்களிலென்பதையும்,

(ii) இரண்டு வருடங்களுக்கும் அதிகமான காலமாக இக்குடும்பங்கள் மேற்படி கிராமங்களில் வாழ்வதோடு, வாக்காளர் பட்டியலில் பதியப்பட்டிருப் பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) இவ்விரு கிராமங்களில் குடியிருக்கும் மக்களுக்கு தபாலில் வரும் கடிதங்கள் தபால் திணைக்களத்தினால் விநியோகப்படுவதில்லை என்பதையும்,

(ii) பொறுப்புள்ள அதிகாரிகளுக்கும் காலி பிரதேச தபால் அத்தியட்சகரிடமும் எழுத்து மூலமாக காரணங்கள் முன்வைக்கப்பட்டுள்ள போதிலும் அது சம்பந்தமாக எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) (i) மேற்படி குடியேற்றங்களில் குடியிருப்போருக்கு தபாலில் கிடைக்கும் கடிதங்களை விநியோகிப்பதற்குத் தேவையான நடவடிக்கையை அவர் எடுப்பாரா என்பதையும்,

(ii) ஆமெனில், அது எப்போது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0544 / '08

14.

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 ஆம் ஆண்டு 27 ஆம் இலக்க இலங்கை போக்குவரத்து சபைச் சட்டத்துக்கமைய 2005.10.19 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் நாடு முழுவதும் பரவலாக இருந்த கொத்தனி பஸ் கம்பனிகள் சட்டப்படி இலங்கை போக்குவரத்து சபையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதையும்,

(ii) மேற்கூறிய வர்த்தமானியின் படி அந்த சட்டத்தின் ஏற்பாடுகள் அமுலுக்கு வரும் திகதி 2005.10.19 என்பதையும்,

(iii) அதன்படி கொத்தனி பஸ் கம்பனிகளில் நடைமுறையில் இருந்த சம்பள முறையும் 2005.10.19 ஆந் திகதி தொடக்கம் சுயமாகவே இலங்கை போக்குவரத்து சபையின் சம்பள முறையாக மாறியது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்கூறிய சம்பள முறை 2008.01.01 ஆந் திகதி தொடக்கம் அமுலில் இருக்குமாறு செயற்படுத்தப்பட வேண்டும் என இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் மற்றும் பிரதி பொது முகாமையாளரின் 2008.01.07 ஆம் திகதியுடன் மு/ப/பி/70 ஆம் தொடர்பிலக்கமிடப்பட்ட 2008 ஆம் ஆண்டு 2 ஆம் இலக்க நிதிப்பிரிவு சுற்றறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது என்பதையும்,

(ii) இது இலங்கை பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட 2005 ஆம் ஆண்டு 27 ஆம் இலக்க இலங்கை போக்குவரத்து சபைச் சட்டம் மற்றும் 2005.10.19 ஆம் திகதிய 1415/15 ஆம் இலக்க (அதிவிசேட) வர்த்தமானியின் ஏற்பாடுகளையும் மீறுகின்றது என்பதையும் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) மேற்கூறிய கொத்தனி பஸ் கம்பனிகளில் உள்ள ஊழியர்களுக்கான சம்பள முறையை 2005.10.19 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்த அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0634/ '08

15.

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) காலி நாகொடயிலுள்ள அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்ட எப்தோப்வத்த காணியில் நில அளவையாளர் திணைக்களத்துக்கு ஒதுக்கப்பட்ட பகுதியை அதற்குப் பிரவேசிக்கும் வழி அடங்கலாக அடுத்த காணியாளர் அனுமதியின்றி கைப்பற்றியுள்ளார் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் விபரங்களுடன் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) உடுகம பார் சந்தியில் ஆயுள்வேத நிலையத்துக்கு காணி வழங்கியவருக்கு மேற்குறிப்பிட்ட ஒதுக்கப்பட்ட காணியை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதா,

(ii) அது எந்த சட்ட நிலைமையின் அடிப்படையில்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இவ்வாறு காணித்துண்டொன்றை வழங்குவதன் மூலம் அனுமதியின்றி அனுபவிப்பவருக்கு இக்காணியைச் சொந்தமாக்கிக் கொள்வதற்கான வாய்ப்பு அதிகரிக்கின்றதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(உ) நில அளவையாளர் திணைக்களத்துக்கு வேறொரு காணி வழங்கப்படுகின்றமை காரணமாக குறிப்பிட்ட காணிப் பிணக்கைத் தீர்த்து அதனை பிரதேச செயலாளருக்கு பொறுப்பளிப்பது எவ்வளவு காலத்தில் நடைபெறுமென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஊ) ஆயுள்வேத வைத்திய நிலையத்துக்கு காணி வழங்கியவருக்கு அதன் பெறுமதிக்கு ஈடாகும் காணியொன்று வழங்கப்பட வேண்டுமாயின், மேற்படி அனுமதியின்றி அனுபவிப்பவரின் காணிக்கு அருகிலமையாத வேறொரு பகுதியில் இதை வழங்க அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(எ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

விஞ்ஞான, தொழில் நுட்பவியல் அமைச்சர்,— தகவல் அத்துடன் தொடர்புத் தொழில்நுட்பவியல் (திருத்தம்),— 2003 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, தகவல் அத்துடன் தொடர்புத் தொழில்நுட்பவியல் சட்டத்தை திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

கலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமைகள் அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 142, நிகழ்ச்சித்திட்டம் 2,— † 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும்

அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் பதினெட்டு மில்லியன் (ரூபா 18,000,000) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வாறு செலவு செய்யப்படலாம்:-

**அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| | | | ரூபா |
| தலைப்பு 142 | — | கலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமைகள் அமைச்சு | |
| நிகழ்ச்சித்திட்டம் 2 | — | அபிவிருத்தி நடவடிக்கைகள் | |
| கருத்திட்டம் 3 | — | சமூக கலாசாரம் இணைந்து செயற்படல் | |
| | | மீண்டுவரும் செலவினம் | 18,000,000 |
| | | மொத்தம் | 18,000,000 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2008, யூலை மாதம் 08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 3 வரையுள்ள மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா 3,198,180,332.

*2.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை (சிறப்பேற்பாடுகள்) சட்டமூலம் - இரண்டாம் மதிப்பீடு.

*3.

சீன வம்சாவழியினரான ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்கல் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம். — இரண்டாம் மதிப்பீடு

*4.

குடியியல் வான்செலவு சட்டமூலம். — இரண்டாம் மதிப்பீடு.

*5.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*6.

இலங்கை மின்சாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*7.

இலங்கை கடன் தகவல் பணியக (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*8.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*9.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*10.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*11.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*12.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*13.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*14.

நகரக் குடியமர்த்தல் அபிவிருத்தி சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*15.

தேசிய புடைவை மற்றும் உடுதுணி நிறுவகச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*16.

நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் அமைச்சர்,— அரச கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, அரச கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் 2 ஆம் 3 ஆம் பிரிவுகளின் கீழ் நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2008, மார்ச் 28 ஆந் திகதிய 1543 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.08.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*17.

நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் அமைச்சர்,— அரச கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, அரச கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் 2 ஆம் 3 ஆம் பிரிவுகளின் கீழ் நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2008, ஏப்பிறல் 07 ஆந் திகதிய 1544/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.08.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*18.

கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சர்,— கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் சட்டத்தின் 61 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஔ) மற்றும் (க) ஆம் பந்திகளின் கீழ் கடற்றொழில், நீரியல் வளங்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2007, திசெம்பர் 17 ஆந் திகதிய 1528/7 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.08.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*19.

நகர அபிவிருத்தி, புனிதப் பகுதிகள் அபிவிருத்தி அமைச்சர்,— நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் (1) உட்பிரிவின் கீழ் நகர அபிவிருத்தி, புனிதப் பகுதிகள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2008, யூன் மாதம் 27 ஆந் திகதிய 1555/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.07.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*20.

சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சர்,— தேசிய சூழல் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1988 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 2000 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் 23அ ஆம் பிரிவின் கீழ் சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2008 சனவரி மாதம் 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.07.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*21.

சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சர்,— தேசிய சூழல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் 23 அ மற்றும் 23 ஆ ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2008 பெப்ருவரி மாதம் 01 ஆந் திகதிய 1534 /18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.07.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*22.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் (எ) ஆம் பந்தியின் கீழ் தேயிலைச் சபையால் ஆக்கப்பட்டு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு 2008, சனவரி மாதம் 10 ஆம் திகதிய 1531/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.04.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான "2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபை(தேயிலைத் தொழிற்சாலைகளின் நிர்மாணமும் தொழிற்பாடும்) குறைந்தபட்ச நியமங்கள் ஒழுங்குவிதிகள்" அங்கீகரிக்கப்படுமாக.

*23.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் மேன்மை தங்கிய சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008 ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப் படுமாக.

*24.

மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்,— விவாதம் ஒத்திவைக்கப் பட்ட விடயம் (ஒற்றோபர் 03, 2006),— "(105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் இலங்கை மருத்துவப் பேரவையுடன்

கலந்தாலோசனை செய்து ஆக்கப்பட்டு 2006, ஓகத்து மாதம் 17 ஆம் திகதிய 1458/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2006.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டு வரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

*25.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007 ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*26.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— நீதிச்சேவை ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்க ளுக்கும் செலுத்தப்படும் மாதாந்தப் படி, அவர்களின் மாதாந்த சம்பளத்தின் 1/3 க்குச் சமமான ஒரு படியாக இருக்க வேண்டுமெனவும், அது 2007 சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து செலுத்தப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது. நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் படிகள் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளு மன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளினால் தீர்மானிக்கப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் படியானது பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*27.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவர்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல. 2),— 2002.01.28 ஆம் திகதி அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்ற தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள், அரசியலமைப்பின் பதினேழாவது சீர்திருத்தத்தின் 27 (2) ஆம் பிரிவின் கீழ் 2002.01.29 ஆந் திகதியிலிருந்து குறித்த பதவிக்கு மீள நியமிக்கப்பட்டார். அதனையடுத்து, அரசாங்க சேவையில் மேற்கொள்ளப்பட்ட சம்பளத் திருத்தங்களின் வண்ணம், தேர்தல் ஆணையாளரின் சம்பளம் 2006.11.23 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டது, எனினும், செயலாளர் பிரமாணக் குறிப்பின் கீழ் இந்தப் பதவிக்குரிய வருடாந்த சம்பள ஏற்றங்களைக் கொடுப்பனவு செய்வது தொடர்பாக குறித்த சந்தர்ப்பத்தில் தீர்மானிக்கப் படவில்லை யாதலால், தேர்தல் ஆணையாளர் திரு. தயானந்த திசாநாயக்க அவர்கள் மீள சேவைக்கு அமர்த்தப்பட்ட 2002.01.29 ஆம் திகதியிலிருந்து பதவி வகிக்கும் வரையான காலத்திற்குரிய சம்பள ஏற்ற பெறுமானங்களையும் சம்பளத்துடன் சேர்த்து வழங்க வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*28.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— அரசியலமைப்பின் 54(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட அரசாங்க

சேவை ஆணைக்குழுவின் தவிசாளரினதும், உறுப்பினர்களினதும் ஊதியமும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து பின்வருமாறு அமைதல் வேண்டுமென இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| ஊதியம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும், மிகுதி 50 வீதத்துடனான மொத்த ஊதியம் 2007.01.01 ஆம் திகதியி லிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாள ருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய ஊதியமும், படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக் கப்பட்ட ஊதியமும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஊதியமும், படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*29.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— அரசியலமைப்பின் 155அ(1) ஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் கொடுப்பனவுகளும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**<u>தவிசாளர் (முழு நேர)</u>**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**<u>உறுப்பினர்கள்</u>**

| | | |
|---|---|---|
| கொடுப்பனவு | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவில் (எரிபொருள் படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தக் கொடுப்பனவு 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் தேசிய பொலிசு ஆணைக்குழுவின் தவிளாசருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகளும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத் தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் கொடுப்பனவுகளும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக் கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*30.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,—

1994 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின் 2(7) ஆம் பந்தியின் பிரகாரம் அக் குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 66,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 80,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 12,000.00 மாதாந்தம் |
| மொத்தம் | | ரூ. 77,000.00 |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளமும் படியும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளமும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*31.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 8 ஆம் பந்தியின் பிரகாரம் தாபிக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் சம்பளங்களும் படிகளும் 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

**தவிசாளர் (முழு நேர)**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 65,000.00 மாதாந்தம் |
| எரிபொருள் படி | - | ரூ. 14,400.00 மாதாந்தம் |
| மொத்தம் | - | ரூ. 79,400.00 |

**உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| சம்பளம் | - | ரூ. 30,000.00 மாதாந்தம் |

அத்துடன், அதிகரிக்கப்பட்ட சம்பளத்தில் (படிகள் நீங்கலாக) 50 வீதம் 2006.01.01 ஆம் திகதியிலிருந்தும் மிகுதி 50 வீதத்துடனான மொத்தச் சம்பளம் 2007.01.01 ஆம் திகதியிலிருந்தும் செலுத்தப்பட வேண்டுமெனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களும் படிகளும் தொடர்பில் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட

பிரேரணையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளங்களுக்கும் படிகளுக்கும் பதிலாக இந்தப் பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்களும் படிகளும் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

32.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---

ຶ